| இராணிப்பேட்டை நகராட்சி | | |
|---|---|---|
| 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் நாள் செவ்வாய்கிழமை முற்பகல் 11.00 மணி அளவில் நடைபெற்ற சாதரண கூட்ட நடவடிக்கைகள் | | |
| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண், மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
| 30.08.2022 | **பொருள் எண்.1**<br>இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜீலை 2022 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.1193/2022/சி1) | நகரமன்ற தீர்மானம் எண்,164 பதிவு செய்யப்பட்டது |
| 30.08.2022 | **பொருள் எண்.2**<br>இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை 2022 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.1194/2022/சி1) | நகரமன்ற தீர்மானம் எண்,165 பதிவு செய்யப்பட்டது |
| 30.08.2022 | **பொருள் எண். 3**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 30 வார்டு பகுதிகளில் டெங்குகாய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு அதற்கு தேவையான கொசுப்புழு ஒழிப்பு மருந்து பைரித்திரம் 2 எக்ஸ்ட்ராக்ட் மருந்து 200 லிட்டர் அளவு மற்றும் அபேட் மருந்து 100 லிட்டர் அளவு அறிவிக்கப்பட்டுள்ளவாறு அரசு (TNMSC) அங்கீகரித்துள்ள நிறுவனத்திடமிருந்து வாங்கி இருப்பில் வைத்து உபயோகிக்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.500000/- த்திற்கும் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் எண்,166 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பைரித்திரம் 2% எக்ஸ்ராக்ட் மருந்து 200 லிட்டர் அளவு மற்றும் அபேட் மருந்து 100 லிட்டர் அளவு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் நேரடியாக பெற்றுக்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி செலவினம் இந்நகராட்சி 2022-2023 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2033/2022/எச்1) | |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 4</u>**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குள் கொசுக்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த தேவையான பாக்டிசைடு (பேசில்ஸ் துரிஞ்சியாஸ் 5% WP) 100 கிலோ வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.150000/-க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பாக்டிசைடு கொசு மருந்து அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து வாங்கவும் அல்லது விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி செலவினம் ரூ.150000/-னை 2022-2023 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1966/2022/எச்1) | நகரமன்ற தீர்மானம் எண்,167<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 5</u>**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கி மூன்று ஆண்டுகள் முடிவடையும்நிலையில் உள்ளதால் தற்போது பணிப்புரிந்து வரும் ஆண் தூய்மை பணியாளர்கள் 43 + பெண் 14 தூய்மை பணியாளர்கள் ஆக மொத்தம் 57 தூய்மை பணியாளர்களுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து பாதுகாப்பு உபகரணங்கள் நேரடியாக | நகரமன்ற தீர்மானம் எண்,168<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | வாங்கி இருப்பில் வைத்துக்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.350000/- மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பாதுகாப்பு உபகரணங்கள் வாங்க விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் ரூ.350000/-னை 2022-2023 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1959/2019/எச்1) | |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 6</u>**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்பதற்கு பயன்படுத்தப்படும் புகைபோக்கி இயந்திரம் Hand Fogging Machine 7 எண்ணிக்கை வாங்கி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.550000/-க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி இயந்திரங்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி தொகை ரூ.550000/-னை, 2022-2023 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1965/2022/எச்1) | நகரமன்ற தீர்மானம் எண்,169<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 7</u>**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்பதற்கு பயன்படுத்தப்படும் புகைபோக்கி இயந்திரம் Vehicle Mount Fogging Machine 1 எண்ணிக்கை வாங்கி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.500000/-க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம். | நகரமன்ற தீர்மானம் எண்,170<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2) மேற்படி இயந்திரங்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி தொகை ரூ.500000/-னை, 2022-2023 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1965/2022/எச்1) | |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 8</u>**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தேவையான உபகரணங்கள் முககவசம் 50,000 எண்ணிக்கை மற்றும் கையுறை 50,000 ஜோடி ஆகியவைகளை வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.10,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பொருட்களை வாங்க விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி தொகையினை 2022-2023 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1203/2020/எச்1) | நகரமன்ற தீர்மானம் எண்,171<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 9</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சி நகரமனற் தலைவர், அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக வாங்கப்பட்டுள்ள ஸ்கார்பியோ ஈப்புவாகனத்திற்கு 2022-2023ம் ஆண்டு வாகன காப்பீடு செய்யவும் அதற்கான செலவினம் தொகை ரூ.53920/-ற்கும் ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக வாங்கப்பட்டுள்ள பொலிரோ ஈப்பு வாகனத்திற்கு 2022-23ம் ஆண்டு வாகன காப்பீடு செய்யவும் அதற்கான செலவினம் தொகை ரூ.26302/-ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகரமன்ற | நகரமன்ற தீர்மானம் எண்,172<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கும் தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கான செலவினம் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1211/ 2022/இ1) | |
| 30.08.2022 | **பொருள் எண். 10**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.07 கோல்டன்நகர் பகுதியில் புதியதாக தெருவிளக்கு அமைக்க மின்கம்பங்கள் நிறுவகோரியதற்கு ஆரம்பக்கட்ட கட்டணமாக தொகை ரூ.2400/- செலுத்துமாறு தெரிவித்து தமிழ்நாடு மின்சார வாரியம் இராணிப்பேட்டை அவர்களிடமிருந்து வரப்பெற்ற கேட்பு கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதிபெற்று தொகை செலுத்தியமைக்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் இநநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . 1846/2021/இ1) | நகரமன்ற தீர்மானம் எண்,173<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.08.2022 | **பொருள் எண். 11**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சென்னை- சித்தூர் தேசிய நெடுஞ்சாலையில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட உள்ள இடத்தில் மின் கம்பங்களை அகற்றுவதற்கான திட்ட மதிப்பீட்டுத்தொகை தெரிவிக்க கோரியதற்கு ஆரம்பக்கட்ட தொகையாக ரூ.1230/- செலுத்துமாறு தெரிவித்து தமிழ்நாடு மின்சார வாரியம் இராணிப்பேட்டை அவர்களிடமிருந்து வரப்பெற்ற கேட்பு கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் எண்,174<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலககுறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2) திட்ட பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . 201/2020/இ1) | |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 12</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுஎண். 12 கிருஷ்ணகிரி டிரங்க் ரோடு கனரா வங்கி சந்து பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறு சின்டெக்ஸ் மின்மோட்டார் பழுதடைந்து பயன்பாடாற்று உள்ளதால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் குடிநீர் பிரச்சனையை தீர்க்கும் வகையில் மினிபவர் பம்பின் பழுதுகளை நீக்கம் செய்ய தோராய செலவினம் ரூ. 110000/-ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தொகை ரூ. 110000/- இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.2117 / 2022/இ1) | நகரமன்ற தீர்மானம் எண்,175<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 13</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவில் அன்றாடம் சேகரம் ஆகும் குப்பை கழிவுகளை சேகரம் செய்ய 22 எண்ணிக்கையிலான பேட்டரி வாகனங்கள் பழுது ஏற்பட்டு திடக்கழிவு மேலாணமை பணிகள் பாதிக்கப்படுகிறது. மேற்படி வாகனங்களில் உள்ள பழதுகளை சீர்செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் அடிப்படையில் வ.எண். 1 முதல் 11 வரையிலான 11 பேட்டரி வாகனங்கள் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதீப்பீட்டு தொகை ரூ.970000/-ற்கும் | நகரமன்ற தீர்மானம் எண்,176<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மன்றத்தின அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தொகை ரூ. 970000/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.1985/ 2022/இ1-1) | |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 14</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவில் அன்றாடம் சேகரம் ஆகும் குப்பை கழிவுகளை சேகரம் செய்ய 22 எண்ணிக்கையிலான பேட்டரி வாகனங்கள் பழுது ஏற்பட்டு திடக்கழிவு மேலாணமை பணிகள் பாதிக்கப்படுகிறது. மேற்படி வாகனங்களில் உள்ள பழுதுகளை சீர்செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் அடிப்படையில் வ.எண். 12 முதல் 22 வரையிலான 11 பேட்டரி வாகனங்கள் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதீப்பீட்டு தொகை ரூ.950000/-ற்கும் மன்றத்தின அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தொகை ரூ. 950000/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண். 1985/ 2022/இ1/-2) | நகரமன்ற தீர்மானம் எண்,177<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 15</u>**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் மின் அஞ்சல் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற இந்திய அரசு அமைச்சகம் நிதி துறை புது டில்லி அவர்களின் கடிதம் எண்.F.N.354/17/2022-TRU நாள்:08.07.2022-ன் படி இந்நகர எல்லைக்குள் உள்ள அனைத்து வீடுகளுக்கும் 75-ம் ஆண்டு சுதந்திர தின விழா கொண்டாடுவதற்கு தேசிய வர்ண கொடியை வீடுகள் தோறும் ஏற்ற 11.08.2022 முதல் 17.08.2022 வரை அனுசரிக்க தெரிவிக்கப்பட்டு 10000 மூவர்ண கொடியை Shine Textile, 52, Kumaran Nagar, Valayankadu Main Road, Tirupur -641 603 என்ற முகவரியில் | நகரமன்ற தீர்மானம் எண்,178<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>பெற்று நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே மூவர்ண கொடியை பெற ஆகும் தோராய செலவினம் ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u><br>1. 75-ம் ஆண்டின் சுதந்திர தின விழா முன்னிட்டு 10,000 மூவர்ண கொடிகள் மற்றும் பத்திரிக்கை அச்சடிக்க ஆகும் தோராய செலவினம் ரூ.2,00,000/- மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தோராய செலவினம் ரூ.2,00,000/-க்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்கவும் 10000 மூவர்ண கொடியை Shine Textile, 52, Kumaran Nagar, VAlayankadu Main Road, Tirupur – 641 603 வாங்கி பெற்று பொது மக்களுக்கு விநியோகம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண். 252/ 2007/பி1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.08.2022</td>
<td><u>பொருள் எண். 16</u><br>இராணிப்பேட்டை நகராட்சி நகரமன்ற தீர்மானம் எண்.163 நாள் 29.07.2022ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின்பேரில் கீழ்காணும் பணிகளுக்கான திட்டமதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>வார்டு 26 ஏரிக்கரை தெரு பகுதியில் உள்ள ஆழ் துளை கிணறு கை பம்ப் அகற்றி சிறு மின் விசை நீர் முழ்கி மோட்டார் பொருத்தவும் சின்டெக்ஸ் (Sintex) டேங்க் அமைக்கவும் , அவ்விடத்திலிருந்து 200 அடி நீளத்திற்க்கு பைப் லைன் அமைத்து குடிநீர் குழாய் வசதி செய்யவும்</td><td>ரூ.150000/-</td></tr>
</table></td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,179<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 2 | வார்டு 22 மாஸ் காம்பௌக்ஸ் பகுதியில் சின்டெக்ஸ் டேங்குடன் சிறுமின்விசை பம்பு அமைத்தல் | ரூ.200000/– | |
| 3 | வார்டு 30 பாரி காலனி பகுதியில் Our Lady School பகுதியில் குடிநீர் விநியோக குழாய் வால்வு மற்றும் பகிர்மான குழாய் அமைத்தல் | ரூ.80000/– | |
| 4 | வார்டு 4 மணியக்கார தெரு விரிவாக்க பகுதியில் சிறு பாலம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் சீர் அமைத்தல் | ரூ.165000/– | |
| 5 | வார்டு 29 பிஞ்சி கே.கே.நகர் பகுதியில் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | ரூ.990000/– | |
| 6 | வார்டு 21 கிடங்கு தெரு பகுதியில் மற்றும் ஜவுளிகடை தெரு சந்து காவல் நிலையம் பகுதியில் சிறு பாலங்கள் அமைத்தல் | ரூ.170000/ | |

<u>அலுவலக குறிப்பு</u> :–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட பணிகளில் வரிசை எண். 1 முதல் 3 வரை குடிநீர் நிதியிலும் வரிசை எண் 4 முதல் 6 வரை உள்ள பணிகளை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் முக்கியத்துவம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1115/2022/இ1)

| | | |
|---|---|---|
| 30.08.2022 | <u>பொருள் எண். 17</u><br>இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை கடைகள், அம்மூர் ரோடு கடைகள், எம்.பி.ஏ.ரோடு கடைகள், முத்துகடை சந்திப்பு கடைகள், ஆர்.ஆர்.ரோடு கடைகள், பழைய ஆடு தொட்டி கடைகள், மற்றும் நகராட்சி பங்க் கடைகளில் கீழ்காணும் கடைகள் நீண்ட நாட்களாக கடை வாடகையினை செலுத்தாததினால் கடைகள் சீல் | நகரமன்ற தீர்மானம் எண்,180<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
வைக்கப்பட்டது.

<table>
<tr><th>வ.எண்</th><th>கடைகளின் விவரம்</th></tr>
<tr><td>1</td><td>தினசரி சந்தை கடை எண்.8,14,16,& 19</td></tr>
<tr><td>2</td><td>அம்மூர் ரோடு கடை எண்.3</td></tr>
<tr><td>3</td><td>அம்மூர் ரோடு முதல் மாடி கடை எண்.4,6,16,17& 18</td></tr>
<tr><td>4</td><td>எம்.பி.டி.ரோடு முதல் தளம் கடை எண்.4,5,8,9,10,11,&12</td></tr>
<tr><td>5</td><td>முத்துகடை சந்திப்பு கடை எண்.3,4,9,10,13,14,15,22& 24</td></tr>
<tr><td>6</td><td>ஆர்.ஆர்.ரோடு கடை எண்.7,10 & 11</td></tr>
<tr><td>7</td><td>நகராட்சி பங்க் கடை எண்.2</td></tr>
<tr><td>8</td><td>திறந்தவெளி குடோன்.1,2,3,4 & 5</td></tr>
</table>

மேற்படி கடைகள் நீண்ட நாட்களாக கடை வாடகையினை செலுத்தாத கடைகள் சீல் வைக்கப்பட்டதால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுகிறது. எனவே மேற்படி கடைகளை ரத்து செய்து பொது ஏலம் வைக்கவும் மேற்படி கடைகளின் குத்தகைதாரர்களின் நிலுவை தொகையினை வசூல் செய்ய சட்ட ரீதியான நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u> :-

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி கடைகளை ரத்து செய்து பொது ஏலம் வைக்கவும் மேற்படி கடைகளின் குத்தகைதாரர்களின் நிலுவை தொகையினை வசூல் செய்ய சட்ட ரீதியான நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண். 3949 /2018/அ3)**
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.08.2022</td>
<td>
<u>**பொருள் எண். 18**</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சந்தைமேடு பகுதியில் செயல்பட்டு வரும் நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தையை தினசரி நாளங்காடியாக மாற்றிடவும், புதிய கடைகள் நடைபாதை, மின்விளக்குகள், வாகனங்கள் நிறுத்துமிடம் வார ஆட்டுசந்தை ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தினசரி நாளங்காடியாக மாற்றியமைக்க விரிவான மண்பரிசோதனை ஆய்வின் அடிப்படையில் கட்டட வடிவமைப்பு ( Steel Structural Design) செய்து தர ஆகும் தோராய செலவினம் ரூ.180000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,181<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | <u>அலுவலககுறிப்பு</u><br>1) அனுமதியளிக்கலாம்<br>(ந.க.எண் . /2022/இ1) | |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 19</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சி பராமரிப்பில் உள்ள காரை நகராட்சி நடுநிலைப்பள்ளியில் கீழ் கண்டுள்ள பணிகளை நடப்பு ஆண்டு கல்விநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. நகராட்சி பள்ளியின் மேற்கூரை பழுது பார்த்தல்,கழிப்பறை பராமரிப்பு மற்றும் வளாகம் முழுவதும் வர்ணம் அடித்து புதுப்பித்தல்.<br>மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 இலட்சம்<br>2. பள்ளி மாணவர்களுக்கு தேவையான இருக்கைகள், கணினி, பிரிண்டர், அலமாரி, மைக்செட் அமைத்தல் மற்றும் மேடை அமைத்தல்.<br>மதிப்பீட்டுத் தொகை ரூ.8.50 இலட்சம்<br><u>அலுவலககுறிப்பு</u><br>1) அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண் . 2101/2022/இ1) | நகரமன்ற தீர்மானம் எண்,182<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 20</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட முத்துகடை பேருந்து நிலையம் அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேல் பயன்பாட்டில் இருந்து தற்போது சேதமடைந்து மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் ந.ம.தீ.எண்.155 நாள் 29.07.2022–ன் மூலம் முத்துகடை கட்டண கழிப்பிட உரிமைத்தினை ரத்து செய்யப்பட்டது. 24.08.2022 அன்று முத்துகடை கட்டண கழிப்பிடத்தினை இடித்து அப்புறபடுத்த ஆய்வு செய்யப்பட்டபோது கழிப்பிடம் பக்கத்தில் உள்ள நகராட்சி பங்கினை அப்புறபடுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. மேற்படி கழிப்பிடத்தின் பக்கத்தில் உள்ள நகராட்சி பங்க் கடை எண்.5–1னை திரு.எ.சுரேஷ் என்பவர் நடத்தி கொண்டு வருகிறார். மேற்படி இடத்தில் புதியதாக கழிப்பறை | நகரமன்ற தீர்மானம் எண்,183<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>கட்டிடம் கட்டுவதற்கு இடையூறாக உள்ள கடையின் உரிமையினை ரத்து செய்யவேண்டியுள்ளது. எனவே மேற்படி கடையின் உரிமையினை<br>ரத்து செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) 2021-2022 ம் ஆண்டு குத்தகை ஏல அறிவிப்பு பொது நிபந்தனைகள் வ எண்.21இ-ன் படி ரத்து செய்ய மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>3) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று முத்துகடை கட்டண கழிப்பிடத்தின் பக்கத்தில் உள்ள கடையின் உரிமையினை ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3232/2020/அ3)</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.08.2022</td>
<td><u>பொருள் எண். 21</u><br>இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்க முதல்வர், இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரக புதிய அலுவலக கட்டிடத்திறப்பு விழாவிற்கும், நகராட்சி அலுவலக எதிரே உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நலத்திட்ட உதவிகள் வழுங்கவும் வருகை தரஉள்ளதால் மாவட்ட ஆட்சியரகத்திற்கு செல்லும் பிரதான சாலையான வார்டு எண்.23 இரயில்வே ஸ்டேஷன் சாலையை புனரமைத்தல் பணி செய்ய கீழ்கண்டவிவரப்படி பணி செய்யவேண்டியுள்ளது.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>பணியின் விவரம்</th><th>மதிப்பீடு தொகை (இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>இரயில்வே ஸ்டேஷ்ன் சாலை (கிருஷணகிரி டிரங்க்ரோடு முதல் வண்டிமேட்டு தெரு வரை) தார்தளம் புதுப்பித்தல் பணி</td><td>ரூ.30.00 இலட்சம்</td></tr>
<tr><td>2</td><td>இரயில்வே ஸ்டேஷன் சாலை கெல்லீஸ் ரோடு முதல் எம்.எப்.ரோடு வரை தார்தளம் புதுப்பித்தல் பணி</td><td>ரூ.31.00 இலட்சம்</td></tr>
</table>
மேற்கண்ட பணிக்கான தொகை அரசு மான்யம் கோரவும் இப்பணி உடனடியாக செய்ய</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,184<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>வேண்டியுள்ளதால் சிறப்பு அனுமதியும், நிர்வாக அங்கீகாரம் கோரவும் மன்ற ஒப்புதலுக்கு.<br><u>அலுவலககுறிப்பு</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்கள் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . 1566/2022/இ1)</td><td></td></tr>
<tr><td>30.08.2022</td><td><u>பொருள் எண். 22</u><br>இந்நகராட்சியில் உள்ள ஆர்.எஸ் சாலையினை புதுப்பிக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 17.06.2022 அன்று கீழ் கண்ட விவரப்படியாக ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது
<table>
<tr><th>வரிசை எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">இரயில்வே ஸ்டேஷன் சாலை (கிருஷணகிரி டிரங்க்ரோடு முதல் வண்டிமேட்டு தெரு வரை) தார்தளம் புதுப்பித்தல் பணி</td><td rowspan="2">30.00</td><td>திரு.எஸ்.நாகராஜன், நெ.26, பெரிய தெரு தேன்பள்ளி கிராமம், காட்பாடி தாலுக்கா, வேலூர்.</td><td>மதிப்பீட்டை விட 0.01 குறைவு</td></tr>
<tr><td>திரு.பி.பாஸ்கர், நெ.17எப்/5 எம்.எப்.ரோடு, நவவ்பூர், இராணிப்பேட்டை</td><td>மதிப்பீட்டை விட 0.21 % அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">இரயில்வே ஸ்டேஷன் சாலை (கிருஷணகிரி டிரங்க்ரோடு முதல் வண்டிமேட்டு தெரு வரை) தார்தளம் புதுப்பித்தல் பணி</td><td rowspan="2">31.00</td><td>திரு.எஸ்.நாகராஜன், நெ.26, பெரிய தெரு தேன்பள்ளி கிராமம், காட்பாடி தாலுக்கா, வேலூர்.</td><td>மதிப்பீட்டை விட 0.01 குறைவு</td></tr>
<tr><td>திரு.பி.பாஸ்கர், நெ.17எப்/5 எம்.எப்.ரோடு, நவவ்பூர், இராணிப்பேட்டை</td><td>மதிப்பீட்டை விட 0.21 % அதிகம்</td></tr>
</table></td><td>நகரமன்ற தீர்மானம் எண்,185<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலககுறிப்பு</u>**<br>1) மேற்காணும் இரண்டு பணிகளுக்கு மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை சமர்பித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதிபெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் .1566/2022/இ1) | |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 23</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட 30 வார்களில் உள்ள பொதுமக்களுக்கு பொதுமக்கள் நலன் பொது சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் தூய்மை பாரத (இயக்கம்) திட்டத்தின் படி திடக்கழிவுகளை தரம் பிரித்து வழங்குவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் தமிழக அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் விழிப்புணர்வுகளை பொது மக்களிடையே கொண்டு செல்லுதல் போன்ற பணிகளுக்கு டிஜிட்டல் விளம்பர பேனர்கள் தயாரித்தல் மற்றும் விழீப்புணர்வு சம்மந்தமாக நோட்டிஸ் பிரிண்ட் செய்தல் மேலும் நகராட்சியால் செய்யப்படும் அனைத்து விதமான பொதுசுகாதார செயல்பாடுகள் குறித்த விழீப்புணர்வு நடவடிக்கைகளை போட்டோ பிரிண்ட்எடுத்து ஆல்பம் தயாரித்தல் மற்றும் நகராட்சியில் பொதுசுகாதார விரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் பொது சுகாதார செயல்பாடுகளை போட்டோ பிரிண்ட் எடுத்து ஆல்பம் மற்றும் பைண்டிங் செய்வதற்கு ஆண்டு ஒன்றிற்கு ஆகும் உத்தேச செலவினம் 2,00,000/- இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2.மேற்படி விழிப்புணர்வு ஏற்படுத்தி அதற்குண்டான ஆவணங்கள், புகைப்படங்கள் மற்றும் பட்டியல் தொகை வழங்க துப்புரவு அலுவலர், மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகியோரின் சான்றினை பெற்று தொகை வழங்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். | நகரமன்ற தீர்மானம் எண்,186<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 3. மேற்படி செலவினம் இந்நகராட்சி 2022-2023 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண் . 2064/2022/எச்1) | |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 24</u>**<br>இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு ஆய்வு செய்யவும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும் அதற்கான ஆய்வு கட்டணம் செலுத்தவும் நகரமன்ற தீர்மானம் எண்.672 நாள் 29.10.2021ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு திட்ட அறிக்கை தயாரிப்பதற்கும் ஆய்வு செய்வதற்கும் கட்டணமாக ரூ.53.50 இலட்சம் செலுத்தக்கோரி செயற்பொறியாளர் RWS DIVISION, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் .L.R.NO.F.RPT UGSS/ DO/RWS RPT /DT.30.06.2022 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2) நகராட்சி நிதிநிலைமை தற்பொழுது சரியில்லாத காரணத்தால் மேற்படி பணிக்கான கட்டணத்தொகை திட்ட அறிக்கை தயார் செய்யும் மதிப்பீட்டுத் தொகையில் சேர்த்து திட்ட அறிக்கை தயாரிக்ககோரி கடிதம் அனுப்பியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண் . 1454/2021/இ1) | நகரமன்ற தீர்மானம் எண்,187<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 25</u>**<br>இந்நகராட்சியில் நகரமன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக வாங்கப்பட்ட ஸ்கார்பியோ மற்றும் பொலிரோ வாகனங்கள் பதிவு செய்வதற்கும் ஸ்கார்பியோ வாகனத்திற்கு ரூ. 294478/- பொலிரோ வாகனத்திற்கு ரூ.159650/- பதிவு கட்டணமாக அரசுக்கு செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலககுறிப்பு</u>** | நகரமன்ற தீர்மானம் எண்,188<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . 1211/2022/இ1)</td><td></td></tr>
<tr><td>30.08.2022</td><td><u>பொருள் எண். 26</u><br>இராணிப்பேட்டை நகராட்சியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட நிதி 2021-2022ன் கீழ் வார்டு எண்.10 சீனிவாசன்பேட்டை அம்பேத்கர் தெருவில் அங்கன்வாடி மையம் ரூ.200000/- மதிப்பீட்டில் மேம்படுத்துதல் மற்றும் பழுது பார்த்தல் பணிக்கு (மையஎண். 33605160332) 11.08.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>ஒப்பந்ததாரர் விவரம்</th><th>சதவீகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.டி.சி.ஐயப்பன்,<br>3/36, குடிகுண்டா,<br>எஸ்.அக்ராஹாரம்,<br>திருத்தணி தாலுக்கா,<br>திருவள்ளுர்</td><td>மதிப்பீட்டை விட<br>0.06% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.பி.பழனி,<br>302/2,தண்டலம்ரோடு,<br>வள்ளாலார்நகர்,<br>இராணிப்பேட்டை</td><td>மதிப்பீட்டை விட<br>0.47% அதிகம்</td></tr>
</table></td><td>நகரமன்ற தீர்மானம் எண்,189<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலககுறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1– கண்டுள்ள, திரு.டி.சி.ஐயப்பன், ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி<br>பெற்று பணிஉத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்<br><br>(ந.க.எண் . 1113/2022/இ1) | |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 27</u>**<br><br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.71 நாள் 13.09.2021ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் படி இராணிப்பேட்டை நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2021–2022ன் கீழ் வார்டு எண்.16 ஹரியந்த் டவுன் குடியிருப்பு பிரதான சாலை மேற்கு பக்கம் (பகுதி) ரூ.255000/– மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு 11.08.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் எண்,190<br>அனுமதிக்கப்பட்டது |

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் விவரம் | சதவீகிதம் |
|---|---|---|
| 1 | திரு.டி.சி.ஐயப்பன்,<br>3/36, குடிகுண்டா,<br>எஸ்.அக்ராஹாரம்,<br>திருத்தணி தாலுக்கா,<br>திருவள்ளுர் | மதிப்பீட்டை விட<br>0.09% குறைவு |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>RJS Construction.<br>45  ஒத்தவாடைத்தெரு,<br>நவல்பூர், இராணிப்பேட்டை</td><td>மதிப்பீட்டை விட<br>0.58% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u>
<ol>
<li>மன்றம் அனுமதியளிக்கலாம்</li>
<li>மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு  ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1– கண்டுள்ள, திரு.டி.சி.ஜயப்பன், ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.09% குறைவான  ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி<br>பெற்று பணிஉத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்</li>
</ol>
(ந.க.எண் . 092/2022/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.08.2022</td>
<td>
<u>பொருள் எண். 28</u>
நகராட்சி நிர்வாக  இயக்குநர் சென்னை 28 அவர்களின் கடிதம் ந.க.எண்.18856/2022/SBM  நாள் 13.07.2022 .கடிதத்தில் தெரிவித்துள்ளதன பேரில் இராணிப்பேட்டை நகராட்சியில் தூய்மை  இந்தியா திட்டத்தின் கீழ்  (SBM 2.0) 2022–2023ல்  நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22 வாரசந்தை மைதானத்தில்  ரூ. 36.28 இலட்சம்  மதிப்பீட்டில்  புதியதாக பொதுகழிப்பிடம் கட்டும்  பணிக்கு ஒப்பந்தப்புள்ளி  கோரியதற்கு 18.08.2022 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு  வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள்  மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வரிசை<br>எண்</th><th>ஒப்பந்ததாரர்</th><th>சதவீகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.எஸ்.எழில்வாணன்,<br>9, பஜார் தெரு,<br>லாலாப்பேட்டை.</td><td>மதிப்பீட்டை விட<br>–0.07% குறைவு</td></tr>
</table>
</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,191<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>திரு.என்.கே.வாசுதேவன்<br>வாசுகி தெரு,<br>பாரதி நகர் எக்ஸ்டென்ஷன்,<br>இராணிப்பேட்டை</td><td>மதிபீட்டை விட<br>+0.05% அதிகம்</td></tr>
</table>
<br>
<u>அலுவலககுறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>
2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1– கண்டுள்ள திரு.எஸ்.எழில்வாணன், ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட –0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் முன்அனுமதி பெற்று பணிஉத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>
(ந.க.எண் . 1915/2022/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.08.2022</td>
<td><u>பொருள் எண். 29</u><br>
இராணிப்பேட்டை நகராட்சி எலலைக்குப்பட்ட பகுதியில் தினசரி சேகரம் ஆகும் குப்பை கழிவுகளை நகராட்சி பகுதியில் உள்ளசீனிவாசன்பேட்டை குப்பை கிடங்கிலும் நகராட்சிக்கு சொந்தமான மற்றொரு குப்பை கிடங்கான மருதம்பாக்கத்தில் உள்ள இடத்திலும் கொட்டி சேகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உள்ள குப்பைகளை பிரித்தெடுத்து இடங்களை மீட்டெடுக்கவும் குப்பைகளை அளவீடு செய்து கலந்தாலோசகரான முதல்வர் அண்ணா பல்கலைக்கழகம், சுற்றுசூழல் ஆய்வு மையம் சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று திட்ட பிரேரணை சமர்பிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித எண்.19009/2022/SBI–1 நாள் 04.08.2022 தெரிவித்துள்ளவாறு ந.க.எண்.464/1, 465/1, 519/1, 510/1, 522/2 மருதம்பாக்கம் கிராமத்தில் உள்ள 10.82 ஏக்கர் பரப்பளவில் உள்ள குப்பைகளை அளவீட்டு அறிக்கை சமர்பிக்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.60,000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,192<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலககுறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண் . 1059/2018/இ1) | |
| 30.08.2022 | **<u>பொருள் எண். 30</u>**<br>இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டை நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பொது பணித்துறை நிர்வள ஆதாரத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பிஞ்சி ஏரியினை புனரமைப்பு செய்து செடி கொடிகள் அகற்றியும் தூர் வாரி ஆழபடுத்தியும் ஏரியில் கலக்கும் கழிவு நிரை தடுக்கும் ஏரியில் கலந்த நீரை சுத்தப்படுத்தி பயன்படுத்தவும் ஏரி கரைகளை பலப்படுத்தியும் ஏரிகரையில் பொதுமக்கள் நடைபயிற்சி மேற்கொள்ளும் வகையில் நடைபாதைகள், புல் தரைகள் மற்றும் இதர பணிகள் நகராட்சி மூலம் மேற்கொள்ள இவ்வலுவலக கடித ந.க.எண்.2161/2021/இ1 நாள் 21.01.2022 மூலம் நீர்வள ஆதாரத்துறையினை கேட்டுக்கொண்டதற்கிணங்க செயற்பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை, மேல்பாலாறு வடிநிலக்கோட்டம் வேலூர்-06, அவர்களின் கடிதம் எண் இவஅ1/கோ180(NOC)2022 நாள் 16.02.2022 மூலம் சில நிபந்தைனைகளுக்குட்பட்டு பணி செய்து கொள்ளுமாறும் இரண்டுமாத காலத்திற்குள் பணியினை முடித்துக்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டது.<br><br>மேற்கண்ட ஏரியில் குறிப்பிட்டுள்ள பணிகள் இரண்டு மாதங்களுக்குள் முடிக்க இயலாது தற்பொது இந்த ஏரியின் மூலம் நீர்பாசனம் பெறும் விளை நிலங்கள் ஏதுமில்லாத நிலையில் இந்த ஏரியின் வருவாய் வழிகள் அடைப்பட்டுள்ளது. நகரின் மையப்பகுதியில் ஏரிஉள்ளதாலும் நகரிலிருந்து வரும் (GREY WATER) கழிவுநீரால் ஏரி மாசடைந்து சுற்றுசூழலுக்கு கேடுவிளைவிக்கும் நிலை உருவாகி வருகிறது. எனவே இந்தஏரியை புனரமைப்பு பணிகள் செய்து நீர்ஆதார ஏரியாக மீண்டும் மாற்றியமைக்க இராணிப்பேட்டை நகராட்சி திட்டம் தீட்டி வருகிறது. ஆனால் ஏரியின் உரிமைதாரராகிய நீர்வள ஆதராத்துறையிடமிருந்து இந்த ஏரியை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்தால் மட்டுமே நகராட்சி நிதியையும் இதற்கான அரசு திட்டங்களையும் பெற்று செயல்படுத்த முடியும். ஏரியின் மொத்த பகுதியையும் இந்நகராட்சி வசம் ஒப்படைக்க பொதுபணித்துறை (நீர்வள ஆதரத்துறையினரை | நகரமன்ற தீர்மானம் எண்,193<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | கேட்டுக்கொள்ளவும் நீர்வள ஆதாரத்துறையிடமிருந்து ஏரியை இராணிப்பேட்டை நகராட்சி வசம் ஒப்படைக்க ஒப்புதல் கிடைக்கப்பெற்ற பின்பு இதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கவும் மன்ற ஒப்புதலுக்கு<br><br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br><br>(ந.க.எண் . 2161/2021/இ1) | |

(ஒம்/ – க. சுஜாதாவினோத்)
நகரமன்றத் தலைவர்,
இராணிப்பேட்டை நகரமன்றம்.